C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—

கோரிக்கை எண் XLVII— மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரைப்படி, கீழ்க்கண்ட கோரிக்கையை அவை முன் வைக்கிறேன் :

"கோரிக்கை எண் XLVII—மாநில அரசாங்கம் வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ், 13,64,80,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மானியத் தொகை வழங்கப் பட்டது.

7. அறிவிப்பு.

தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்: தமிழ்நாடு 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை இந்த அவைக்குக் கொண்டு வருவதற்கும், அதன் மீது விவாதிப்பதற்கும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் தமது இணக்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக் கின்றேன்.

இந்த மசோதாவை மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அவையின் முன் கொண்டு வருவார்கள்.

8. அரசாங்க மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1967-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகம் செய் கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர்: இம்மசோதா அறிமுகம் செய்யப்படுகிறது.